M

# இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2018

வகுப்பு - 12

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.15 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்: 45

## பிரிவு - I

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **10×1=10**

1) இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும்.
   அ) முதன்மைச் சந்தை ஆ) இரண்டாம் நிலைச்சந்தை
   இ) பொருட்கள் சந்தை ஈ) ஒழுங்குமுறை விற்பனைச் சந்தை
2) ஒரு காளை ஊக வணிகர் இதை நம்புகிறார்.
   அ) விலைகள் உயருதல் ஆ) விலைகள் குறையும்
   இ) நிலையான விலைகள் ஈ) விலையில் மாற்றமேதுமிருக்காது
3) பங்கு மாற்றகம் பங்குகளின் ஊக வணிகத்தை
   அ) அனுமதிப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை
   இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடைசெய்யும்
4) கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை
   அ) 2 ஆ) 7 இ) 10 ஈ) 25
5) கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படை நோக்கமானது
   அ) இலாபம் ஈட்டுவது
   ஆ) உறுப்பினர்களின் நன்மைக்காக இன்றியமையாத சேவையை நிர்வாகம் செய்வது
   இ) சமுதாயத்திற்கு இன்றியமையாத சேவையை செய்தல்
   ஈ) சமுதாயத்திற்குப் போதுமான தரமான பொருட்களைத் தருவது
6) கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது
   அ) கிராமங்களில் மட்டும் ஆ) கிராமங்களிலும், நகரங்களிலும்
   இ) பெருநகரங்களில் மட்டும் ஈ) நகர்ப்புறங்களில் மட்டும்
7) பொதுக்கழகத்தின் நிருவாகம் இதைப் பெற்றிருக்கிறது.
   அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் ஆ) செயல்பாட்டுச் சுதந்திரமின்மை
   இ) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்
8) பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்.
   அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக்கழகம்
   இ) அரசு நிறுமம் ஈ) மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை
9) முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு
   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா
10) உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள்
   அ) கூட்டுப்பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம்
   இ) இந்து கூட்டுக்குடும்பம் ஈ) கூட்டுறவுச் சங்கம்

## பிரிவு - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 11ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **4×2=8**

11) செபி என்றால் என்ன?

12) போல்ட் என்பது யாது?

13) இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

14) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளின் எடுத்துக்காட்டுகளைத் தருக.

15) அரசு நிறுமம் என்றால் என்ன?

16) அரசுத் தொழில்கள் அனைத்துப் பகுதிகளிலும் சமமாக வளர்ச்சி எவ்வாறு பெற்றுத் தரும்?

## பிரிவு - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **4×3=12**

17) முதலீட்டாளர், ஊக வணிகர் இவர்களுக்கிடையே உள்ள மூன்று வேறுபாடுகள் எழுதுக.

18) புதுப் பங்குகள் எவ்வாறு வெளியிடப்படுகின்றன?

19) கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் மூன்று குறைபாடுகளை விவரிக்க.

20) கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளைச் சுருக்கமாக வரைக.

21) சிறுகுறிப்பு வரைக:

(அ) அரசு துறைவாரி அமைப்பு (ஆ) தாமதம் மற்றும் முனைப்பற்ற போக்கு

22) அரசுத் தொழில்களின் நோக்கங்களை ஏதேனும் மூன்று சுருக்கமாக எழுதுக.

## பிரிவு - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **3×5=15**

23) துறைவாரி அமைப்பின் இயல்புகளை விவரி.

**(அல்லது)**

பங்கு மாற்றகத்தின் இயல்புகளை விளக்குக.

24) புதிய வெளியீட்டிற்கானச் செயல்முறைகளை விவரி.

**(அல்லது)**

கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள ஏதேனும் வேறுபாட்டினைக் கூறுக.

25) ஏதேனும் எட்டு கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளை எழுதுக.

**(அல்லது)**

போல்ட் எவ்வாறு செயல்படுகிறது? அதன் ஆற்றல்கள் யாவை?